ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2388/32 - 2024 ජූනි මස 12 වැනි බදාදා - 2024.06.12
*2388/32 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KDS/TUM/04/01/06/12.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/7/2019/HW/19.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்தில் தும்பனே பிரதேச செயலாளர் பிரிவில், இல. 322 பரன்தர கிராம அலுவலர் பிரிவில் உள்ள, தொடம் கும்புர கிராமத்தில் அமைந்துள்ள கண்டி மாவட்ட நில அளவை அதிபதி சார்பாக நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கடத்திரல் வரைபட இல. 321290, தொகுதி இல. 01, தாள் இல. 1 இல் விபரிக்கப்பட்டுள்ள காணித் துண்டு விஸ்தரிப்பதற்காக எடுக்கப்படுகின்றது:

01. **துண்டு இல. 2**

காணியின் பெயர்: தீஎல்லவத்தை; காணியின் விபரம்: தோட்டம்; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: லலான் பெருந்தோட்ட நிறுவனம்; விஸ்தீரணம்: 0.3880 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தும்பனே பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 05 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டப்ளியு. ஜீ. எம். ஹேமந்த குமார,
பிரதேச செயலாளர்.

பிரதேச செயலகம்,
தும்பனே,
2024, ஏப்பிறல் 26.

EOG 06 - 0131

1A - G 42094 - 09 (2024/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

இவ்அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.